பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 14 செவ்வாய்க்கிழமை 27.04.2021 கதிர் 41

## துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்தில் குறைபாடுகள்

### அமைச்சர் கம்மன்பில அதிரடி

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகர வலய பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இந்தச் சட்டமூலம் குறித்து நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்மானத்தை முறையாகச் செயற்படுத்துவோம். ☞2

# ரிஷாத், ரியாஜ் இருவரையும் 3 மாதங்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கு உத்தரவு!

### பாதுகாப்பு அமைச்சு அனுமதி என்கிறார் பொலிஸ் பேச்சாளர்



அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோரை 90 நாள்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கான உத்தரவு பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து பெறப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

ஏற்கனவே பெறப்பட்டிருந்த 72 மணிநேர தடுப்புக் காலம் இன்று காலையுடன் நிறைவடைந்துள்ள நிலையில், மேலும் 90 நாள்கள் தடுத்து வைப்பதற்கான உத்தரவைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பெற்றுக்கொண்டுள்ளனர். ☞2



## பலமிக்க ஆட்சியே எங்களின் திட்டம்!

### மஹிந்தவின் கருத்துக்கு விமல், கம்மன்பில கூட்டாகப் பதில்

அரசைக்கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. அரசை விட்டு வெளியேறுவதும் எமது கொள்கை அல்ல. பலமிக்க ஆட்சியைக் கொண்டு நடத்துவதே எமது திட்டம். இதை உணர்ந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ செயற்பட வேண்டும். ☞2



## அனைத்துப் பாடசாலைகளும் 30ஆம் திகதி வரை மூடப்படும்

### அரசு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 27

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மூடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவே இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்த முடிவு எடுக்கப்பட்டது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அதேவேளை, தனிமைப்படுத்தல் சட்டத்தையும், சுகாதார நடைமுறைகளையும் முழுமையாகப் பின்பற்றுமாறு அனைத்து தரப்பினரிடமும் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

## மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகளை மீளச் சுவீகரிக்கும் நோக்கம் எமக்கில்லை

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகளை மீண்டும் சுவீகரிக்கும் நோக்கம் எமக்கு இல்லை. ஆனால், நீங்கள் குறிப்பிடும் விடயம் தொடர்பில் ஆராய்கின்றேன்.

- இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஊடகங்களிடம் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசின் காலத்தில் காங்கேசன்துறையில் விடுவிக்கப்பட்ட தனியார் காணிகளை இராணுவத்தினர் மீளக்கையகப்படுத்துவது தொடர்பில் கேட்டபோதே ☞2

## தனுஷ்கோடியிலிருந்து இலங்கைக்கு தப்பமுயன்ற பங்களாதேஷ் நபர் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்.27



இந்தியாவில் இருந்து இலங்கைக்குத் தப்பிச் செல்ல முயன்ற பங்களாதேஷ் நாட்டவர் ஒருவரை தனுஷ்கோடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வட மாநிலத்தைச் சேர்ந்த ஒரு நபர் தனுஷ்கோடியில் நின்று கொண்டிருக்கின்றார் எனக் கிடைத்த தகவலின்படி பொலிஸார் ஒருவரைச் சந்தேகத்தின் அடிப்படையில் பிடித்து விசாரித்ததில் திலிப் - நாராயண் என்னும் பெயருடைய பங்களாதேஷ் நாட்டவர் அவர் எனத் தெரிய வந்தது. ☞2

## மேலும் 2 இடங்கள் முடக்கம்

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டில் மேலும் இரண்டு கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தின் உக்குவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்லேக்கும்புர கிராம சேவகர் பிரிவு மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தின் ஹிங்குரக்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிக்கெத்த கிராம சேவகர் பிரிவு என்பன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

## இந்திய மக்களுக்காகப் பிரார்த்திப்போம்! எங்களையும் பாதுகாத்துக் கொள்வோம்!

### மனோ எம்.பி. கோரிக்கை

எம்மைவிட மோசமாக கொரோனா பேராபத்தில் விழுந்து விட்ட அப்பாவி இந்திய மக்களுக்காக, எல்லா பேதங்களையும் தள்ளி வைத்து விட்டு, மனிதத்தின் பெயரால் பிரார்த்தனை செய்யுங்கள் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது:- ☞2

## யாழ். மாவட்டத்தை தற்போதைக்கு முடக்கும் தீர்மானம் எதுவும் இல்லை

### அரச அதிபர் தகவல்



(எஸ்.நிதர்ஷன்)

தற்போதைய நிலையில் யாழ் மாவட்டத்தை முடக்கும் தீர்மானம் இல்லை என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

தற்போதைய கொரோனா நிலைமைகள் தொடர்பில் இன்று யாழ் மாவட்ட செயலகத்தில் தாம் நடத்திய ஊடகவியலாளர் ☞2

## யானை தாக்கி வயோதிபர் பலி

### திருமலையில் சோகம்



திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இன்று அதிகாலை யானை தாக்கி வயோதிபர் ஒருவர் பலியாகியுள்ளார். ☞2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## யாழ். மாவட்டத்தை தற்போதைக்கு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சியான எமு மாறான பி.சி.ஆர். பரிசோதனைகளின் பிரகாரம் நேற்றைய தினம்( திங்களன்று) 13 பேருக்கு தொற்று இனங்காணப்பட்டுள்ளது அந்த வகையிலே ஒக்டோபர் மாதத்திற்குப் பிறகு 1,201 பேருக்கு யாழ்மாவட்டத்தில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 708 நபர்கள் பூரண சுகமடைந்து வீடு திரும்பியிருக்கிறார்கள்

இன்றுவரை 19 கொரோனா மரணங்கள் யாழ்மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. நேற்றுவரை ஆயிரத்து 253 குடும்பங்களைச் சேர்ந்த 3,416 நபர்களை சுய தனிமைப்படுத்தலுக்குட்படுத்தி இருக்கின்றோம்.

ஜனவரி மாதத்திற்கு பின்னர் தகுதியான சுமார் ஆயிரத்தி523 சுயதனிமைப் படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளோம்

அதனடிப்படையில் 152. 3 லட்சம் ரூபா இன்று வரை இந்த வருடம் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளோருக்கு வழங்கப்பட்டுள்ளது மேலும் 491 குடும்பங்களுக்கான நிதிக்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அந்த நிதி கிடைத்தவுடன் அவர்களுக்கும் அந்தநிதி வழங்கப்படும்

இந்த நிலையில் தற்போது அரசினுடைய புதிய சுகாதார அறிவுறுத்தலுக்கு அமைய சுகாதார வழிமுறைகளை பொதுமக்கள், அரச, தனியார் துறை நிறுவனங்கள் அனைவரும் புதிய நடைமுறைகளைப் பின்பற்றி செயற்பட வேண்டும்

வழிபாட்டு இடங்களில் 50 பேருக்கு மாத்திரமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனினும் யாழ்ப்பாண மாவட்டத்திலே வழிபாட்டு இடங்களில் இந்த நடைமுறையினை பொதுமக்கள் அனுசரித்துச் செல்லவில்லை என அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த அலட்சியத்தை விடுத்து சுகாதார நடை முறைகளை அலட்சியம் செய்யாது செயற்படவேண்டும்

பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த நடைமுறை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனவே ஆலயங்களில் 50 பேருக்கு மேற்பட்ட ஒன்றுகூடல்களை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இந்த விடயங்களை ஆலய பரிபாலன சபை மற்றும் ஆலயநிர்வாகத்தினர் கண்காணித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வழிபாட்டு இடங்களில் இறுக்கமான நடைமுறையினை பின்பற்றப்படவேண்டியது அவசியமாகும்.

பொது நிகழ்வுகள், தனியார் நிகழ்வுகள், அரசியல் நிகழ்வுகள் அனைத்தும் இரண்டு வாரங்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளன. எனவே மக்கள் ஒன்றுகூடல்களைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள இந்த நடைமுறைகளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பொது மக்கள் ஒன்று கூடும் இடங்களில் சமூக இடைவெளியைப் பேணுதல் மிக மிக அவசியமானது.

பிரதேச செயலர் மட்டத்திலும், கிராம மட்டங்களில் கொரோனா தொடர்பான விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு ஏற்படுத்தி வருகின்றோம். இந்த விழிப்புணர்வுச் செயற்பாடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தை முடக்குவதற்கான தீர்மானம் ஏதும் இல்லை. ஆனால் அரசாங்கம் ஏனைய மாவட்டங்களில் சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை சுய தனிமைப்படுத்தலுக்குட்படுத்தி இருக்கின்றது.

ஆனால் அந்த ஒரு நிலைமை யாழ் மாவட்டத்திற்கு இன்னும் ஏற்படவில்லை. அவ்வாறு ஏற்படும் போது நிச்சயமாக முடக்குவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படலாம்.

அதற்காகத் தற்போதைய நிலையில் பொதுமக்கள் பீதியடைய தேவையில்லை. ஏனென்றால் கடந்த வாரம் மக்கள் சற்று பீதியடைந்த நிலை காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதாவது மக்கள் முன்னெச்சரிக்கையாக அதிக அளவிலான பொருள் கொள்வனவில் ஈடுபட்டமை அவதானிக்கபட்டது

பொது மக்கள் ஒன்றுகூடல்களைத் தவிர்த்து பாதுகாப்பாக நடந்து கொண்டால் இவ்வாறான அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ளலாம். ஆகவே அசௌகரியங்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான பொறுப்பு மக்களிடம் இருக்கின்றது.

தற்போதைய நிலையில் யாழ்ப்பாண குடாநாட்டை முடக்கும் தீர்மானம் இல்லை எனினும் எதிர்வரும் மூன்று வாரங்களுக்குப் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி ஒன்றுகூடல்களைத் தவிர்ப்பது மிக அவசியம். - எனவும் அவர் மேலும் தெரிவித்தார்

## துறைமுக நகர ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கொழும்பு ஆணைக்குழு சட்டமூலத்துக்கும், உத்தேச கொழும்புத் துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலத்துக்கும் இடையில் பாரியளவு வேறுபாடுகள் கிடையாது.

- இவ்வாறு சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகர சட்டமூலம் தொடர்பில் எதிர்த்தரப்பினர் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவித்துள்ளார்கள்.

கொழும்புத் துறைமுக நகர விவகாரத்தில் சர்வதேசத்தின் தலையீடு தற்போது அதிகரித்துள்ளது. ஒரு தரப்பினரது குறுகிய தேவைகளை அரசியல்வாதிகளும், ஆளும் தரப்பின் ஒரு சிலரும் நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள்.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தில் தனி நாட்டுக்கான அனைத்து அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாது.

கொழும்புத் துறைமுக நகரத்தில் வரையறுக்கப்பட்ட நிலப் பரப்பு மாத்திரம் காணப்படுகின்றதே தவிர வரையறுக்கப்பட்ட மக்கள் தொகை, சர்வதேச ஒப்பந்தங்களுக்குக்கான அங்கீகாரம் என்பன கிடையாது - என்றார்.

## ரிஷாத், ரியாஜ் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குண்டுதாரிகளுக்கு உதவிய குற்றச்சாட்டில் இவர்கள் இருவரும் கடந்த 24ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விஞ்ஞான, வாய்வழி, ஆவணப்படம் மற்றும் ஏனைய தொழில்நுட்ப ஆதாரங்களைக் கண்டறிவதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஆகியன விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## யானை தாக்கி ......



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சேருநுவர - ஆர்.பீ.04 பகுதியைச் சேர்ந்த பி.எச்.டி.சுவேற்றி சவரிமுத்து (வயது 77) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்குப் பின்னால் உள்ள காட்டுப் பகுதிக்குச் சென்ற வேளையிலேயே யானை தாக்கியுள்ளது. சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பான விசாரணைகளை சேருநுவரப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இந்திய மக்களுக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுமார் 130 கோடி சனத்தொகை கொண்ட பாரத தேசம், இன்று கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கி அல்லலுறுகின்றது. இந்திய நகரங்களிலும், கிராமங்களிலும் வாழும் மக்களின் கண்ணீர் எமக்குத் தெரிகிறது. இது கொரோனா சுனாமி அவலம் என கூறப்படுகின்றது.

எமது நாட்டிலும் இந்தக் கொரோனா கொடுமை புதிய வீரியத்துடன் பரவி வருகின்றது. நாட்டின் சுகாதார துறையினருக்கு வழங்கும் பூரண ஒத்துழைப்பின் மூலம் இதை நாம் எதிர்கொள்ள வேண்டும். அரசை பொறுப்புடன் செயற்படுமாறு கூறும், அதேவேளை பொதுமக்களாகிய நாமும் பொறுப்புடன் நடந்து இந்தப் பேரழிவை எதிர்கொள்ள வேண்டும்.

மிகப் பெரிய சனத்தொகையை கொண்டுள்ள எமது மிக நெருங்கிய அயல்நாடான இந்தியாவில், ஒட்டுமொத்த சனத்திரளின் மத்தியில் வீரியமுள்ள கொரோனா கிருமிகள் வேகமாகப் பரவி வருவதை செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், பாரதம் இந்தக் கொடுமையிலிருந்து விரைவில் மீள வேண்டும் என்ற நோக்கில் நாம் நமது வீடுகளில் இருந்தபடி பூஜை, நமாஸ், பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## தனுஷ்கோடியிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவர் மூன்று தினங்களுக்கு முன்பு கொகத்தாவிலிருந்து புறப்பட்டு நேற்று 26 ஆம் திகதி இரவு இராமேஸ்வரம் வந்துள்ளார்.

தனுஷ்கோடியில் இருந்து இலங்கைக்குக் கள்ளத்தனமாகப் படகின் மூலம் இவர் செல்ல இருந்தார் எனத் தனுஷ்கோடி பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்தது.

இவர் பத்து வருடங்களுக்கு முன்பு இலங்கையில் வேலை செய்து வந்தார் எனவும், இதனால் மீண்டும் அங்கு செல்ல விரும்பினார் எனவும் தனுஷ்கோடி பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளார். மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

## மக்களிடம் ஒப்படைக்கப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகளை நாம் மீள ஆக்கிரமிக்கவில்லை. அவற்றைச் சுவீகரிக்கும் நோக்கமும் எமக்கு இல்லை. காங்கேசன்துறையில் நீங்கள் குறிப்பிடும் விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்றேன் - என்றார்.

## பலமிக்க ஆட்சியே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இவ்வாறு அமைச்சர்களும் பங்காளிக் கட்சித் தலைவர்களுமான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

அரசின் திட்டங்களை அரசுக்குள் இருந்து விமர்சிப்பவர்கள் அரசிலிருந்து தாராளமாக வெளியேறலாம். கதவு திறந்துதான் உள்ளது' என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது காரசாரமாகத் தெரிவித்திருந்தார்.

பிரதமரின் இந்தக் கருத்துத் தொடர்பில் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமரின் இந்தக் கருத்துக்கள் ஆரோக்கியமானவை அல்ல. அரசுக்குள் இருக்கின்ற முரண்பாடுகளை - கருத்து வேறுபாடுகளைப் பேசித் தீர்க்கவேண்டும் என்றே நாம் பிரதமரிடம் பல தடவைகள் கோரியிருந்தோம். என்ன முரண்பாடுகள் இருந்தாலும் அதை நேரில் பேசித் தீர்க்கலாம். அதற்கு நாம் தயாராக உள்ளோம்.

அரசை விமர்சிப்பவர்கள் அரசிலிருந்து வெளியேறலாம் என்று பிரதமர் தெரிவித்துள்ள கருத்துக்கள் எமக்கான கருத்துக்கள், குறிப்பாக பங்காளிக் கட்சிகளுக்குரிய கருத்துக்கள் என்று நூறு வீதம் அர்த்தம் கொள்ளக் கூடாது. இவை பொதுவான கருத்துக்களாகவும் இருக்கலாம். எம்மை நோக்கிய கருத்துக்களாகவும் இருக்கலாம். அவரை தவறான வழிக்கு கொண்டு செல்ல முயல்பவர்களுக்கு அவர் தெரிவித்த கருத்துக்களாகவும் இருக்கலாம்.

எனவே, என்ன பிரச்சினைகள் என்றாலும் நாம் பேசித் தீர்க்க தயாராக இருக்கின்றோம். அரசைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. அரசை விட்டு வெளியேறுவதும் எமது கொள்கை அல்ல. பலமிக்க ஆட்சியைக் கொண்டு நடத்துவதே எமது திட்டம். இதை உணர்ந்து பிரதமர் செயற்பட வேண்டும். இல்லையேல் அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்று நாம் சொல்லத் தேவையில்லை. இந்த ஆட்சிக்கு ஆணை வழங்கிய மக்களையும் ஏமாற்றத் தயாரில்லை - என்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள குளிர்பான விநியோகஸ்த நிலையத்துக்கு SALES REP தேவை. மாதம் 45,000 சம்பாதிக்கலாம்.
தொடர்புகளுக்கு
0774737737/ 0773257747




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பொறுப்புடன் செயற்படுவோம்!

பரந்த பாரத தேசத்தை உண்டு, இல்லை என்று சொல்லும் அளவுக்குப் பீடித்துப் பிய்த்து உதறுகின்றது கொரோனாப் பேரரக்கன்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் தினசரி பத்துப் பன்னிரண்டாயிரம் பேருக்கே என்றளவுக்குத் தொற்று வீதத்தைக் குறைத்த இந்தியா இப்போது அல்லாடுகின்றது. மூன்று நாள்களில் ஒரு மில்லியன் தொற்றாளர்கள் என்ற அளவுக்கு நிலைமை கட்டுமீறியுள்ளது. குறுகிய காலத்தில் முப்பது மடங்கு அதிகரிப்பு. அது இன்னும் பல மடங்கு எகிறும் ஆபத்து இருப்பதாக அஞ்சப்படுகின்றது.

நாட்டில் மருத்துவ சிகிச்சைக்கான வாய்ப்பு எல்லையை மீறி தொற்றாளர் எண்ணிக்கை கட்டுப்பாட்டைக் கடந்து விட்டதாக மருத்துவ வட்டாரங்கள் விசனம் தெரிவிக்கின்றன.

உலகில் அதிக அளவில் கொரோனாத் தடுப்பூசிகளைத் தயாரிக்கும் இந்தியாவே அந்தப் பேரரக்கனுக்கு முகம் கொடுக்க முடியாமல் அல்லாடுகையில் பக்கத்தில் சிறிய நாடான இலங்கை போன்றவற்றின் ஆபத்து நிலைமை சொல்லிப் புரிய வைக்க வேண்டியதில்லை.

அதிர்ஷ்டவசமாக அகண்ட பாரத தேசத்தின் மிக நெருங்கிய அயல்நாடாக இலங்கை இருக்கின்றபோதிலும் இந்தியாவுடன் தரைவழித் தொடர்பை நமது நாடு கொண்டிருக்கவில்லை. ஆழமான இந்து சமுத்திரம் நம்மைப் பிரித்து நின்றாலும் அதைக் கடப்பது கொரோனாப் பேரரக்கனுக்கு அப்படி ஒன்றும் நெருக்கடியான விடயம் அல்ல என்பதுதான் உண்மை. நாம் அது குறித்து சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இந்தியாவில் முதலில் ஊடுருவிப் பரவிய கொரோனா வைரஸின் மூன்றாவது திரிவு வடிவமும் வெளிப்பட்டு விட்டதாக செய்திகள் வெளியாகின்றன. இந்த வைரஸ் தனக்கு எதிரான தடுப்பு எதிர்ப்புகளை எதிர்கொண்டு மேலெழுவதற்காகத் தனது கட்டமைப்பை மாற்றி, விகாரமடைந்து, புதுப்புது வடிவங்களை எடுக்கின்றது. அந்த வைரஸின் உள்ளடக்கமான புரத அமைப்பில் ஏற்படுத்தப்படும் மாற்றம் மூலம் புதிய கட்டமைப்பை அந்த வைரஸ் பெற்றுக் கொள்கின்றது.

இவ்வாறு திரிவு மூலம் புதிதாகத் தோன்றும் வைரஸ்கள் வீரியம் மிக்கவையாகவும், தாக்குப் பிடிக்க கூடியவையாகவும், வேகமான தொற்றுப் பரவல் தகைமையைக் கொண்டவையாகவும் மாற்றமுறுகின்றன.

அதனால் புதிது புதிதாகத் தோன்றும் வைரஸ் திரிவுகளை எதிர்கொள்வது மனித குலத்துக்குப் பெரும் சவாலாக மாறி வருகின்றது.

இதுவரை இருந்த கொரோனா வைரஸுக்கு எதிரான காப்பரணாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் தடுப்பூசிகள், புதிய – திரிவடைந்த – வீரியம் மிக்க – ஆக்ரோஷமான – மிக மோசமான – வைரஸுக்கு எதிராகவும் காத்திரமான தடுப்பு அரணைத் தருமா என்பது கேள்விக்குறிதான்.

ஆகவே, திரிவடைந்த வைரஸ்கள் இந்தியா போன்ற நாடுகளில் இருந்து நமது நாட்டுக்குள் புகுந்து விடாமல் பாதுகாத்துக் கொள்வது நமது சுய பொறுப்பாகின்றது.

இந்தியாவையும் இலங்கையையும் பிரித்து நிற்கும் இந்து சமுத்திரம் இது விடயத்தில் நமக்கு நல்ல காவலரண் என்றாலும், அதையும் தாண்டி, நமக்குள் இருக்கும் போதை வஸ்துப் பரிமாற்றக் கலாசாரம் என்ற கூட்டிணைவுப் பழக்க வழக்கம் மிகமிக வலுவானது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

நமது காவல்துறைக்கும் முப்படைகளுக்கும் கண்ணில் மண்ணை வாரி விட்டு தமது கைங்கரியத்தை வெற்றிகரமாக ஒப்பேற்றுவதில் போதைவஸ்துப் பரிமாற்ற கும்பல்கள் படுசூரர்கள்.

நாம் விரும்பியோ, விரும்பாமலேயோ ஒரு பெரும் போதை வஸ்துப் பரிமாற்ற கலாசார வளையம் நமது பிரதேசங்களையும் உள்ளடக்கி தென்னிந்தியாவுடன் ஒன்றிணைந்து வலுவாகச் செயற்படுகின்றது.

கடும் கண்காணிப்புகள், கெடுபிடிகள், பாதுகாப்புகளை எல்லாம் முறியடித்து இரு நாடுகளின் கரையோரக் காவலர்கள், கடற்படையினர் கண்களில் மண்ணைத் தூவி விட்டு, 'கருமமே கண்ணாயினர்' என்று தமது கடத்தல் விடயங்களில் முழுமூச்சாக அவர்கள் இருக்கின்றார்கள். நமது நாடுகளின் கரையோரங்களை அண்டி இந்தச் சமூகச் சீரழிவு நடவடிக்கை தொடர்ந்து கொடி கட்டிப் பறப்பதாகக் களத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தியாவில் திரிவடைந்த நிலையில் பரவி வரும் மோசமான கொரோனா வைரஸ் இந்தப் போதைப் பொருள் கடத்தல் மற்றும் சாதாரண கடத்தல்காரர்கள் மூலம் இலங்கைக்குள்ளும் ஊடுருவும் பேராபத்து உள்ளது.

சட்டத்தைப் பாதுகாப்போர் மட்டுமன்றி, பொது மக்களும் விழிப்பாக இல்லாவிட்டால் மோசமான திரிவடைந்த – வீரிய – வைரஸ் இந்தியாவிலிருந்தும் நம் நாட்டுக்குள்ளும் இலகுவில் ஊடுருவிடும். அது பின்னர் தீர்க்க முடியாத பிணியாகி விடும்.

# கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தல்; இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றம்

## பிரதமர் பெருமிதம்



கொரோனாபரவலைக்கட்டுப்படுத்துவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையிடம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளுக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தின் 77ஆவது அமர்வின் தொடக்கப் பிரிவில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொற்றுக்குள்ளானவர்களைக் கண்டறிதல், தொடர்புத்தடமறிதல், தனிமைப்படுத்தல் மற்றும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை மூலம் இலங்கை மிகக் குறைந்த இறப்பு வீதத்தையும் அதிக மீட்பு வீதத்தையும் பதிவு செய்துள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அரசாங்கம் கிட்டத்தட்ட ஒரு லட்சம் இலங்கையர்களைத் திருப்பி அனுப்பியதுடன், பெப்ரவரியில் தடுப்பூசி திட்டத்தைத் தொடங்கியது என்றும் கூறினார்.

தொற்றுநோய்களின்போதுகூட, பல துறைகளில் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்தன எனத் தெரிவித்த பிரதமர், ஏற்றுமதித் துறை தொடர்ந்து செயற்பட்டு வந்ததுடன், ஜனவரி மாதத்தில் சுற்றுலா மீண்டும் ஆரம்பித்தது எனவும் தெரிவித்தார்.

மத்திய வங்கி கொள்கை விகிதங்களைக் குறைத்து பல சலுகை மறுநிதியளிப்பு திட்டங்களைச் செயற்படுத்தியது எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு அரசாங்கம் ஆழ்ந்த உறுதி பூண்டுள்ளது எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இலங்கை தனது பிராந்திய உறவுகளை வலுப்படுத்துவதில் ஆர்வமாக இருப்பதாகவும், தென், தெற்கு ஒத்துழைப்பை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாகவும் பிரதமர் கூறினார்.

# நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளில் மகாசங்கத்தினர் பங்குதாரர்களாகுவது பௌத்த சாசனத்துக்கு முரண்

## தேசிய பிக்கு முன்னணி சுட்டிக்காட்டு




நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் குறித்து மகாசங்கத்தினர் முதலில் தெளிவு பெற வேண்டும். நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளில் மகாசங்கத்தினர் பங்குதாரர்களாகுகின்றமை பௌத்த சாசனத்திற்கு முரணானது என தேசிய பிக்கு முன்னணியின் செயலாளர் வக்ரமுல்லே உதித்த தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய பிக்கு முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் அரசாங்கத்துக்குள் இரு வேறுபட்ட நிலைப்பாடு காணப்படுகிறது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்திலும் இத்தன்மையே காணப்பட்டது. மக்களின் அரசியல் சிந்தனையைத் திசை திருப்புவதற்காக அரசியல்வாதிகள் இருவேறுபட்ட கொள்கைகளைக் கொண்டுள்ளார்கள்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் அரசாங்கம் முறையற்ற வகையில் செயற்பட முயற்சித்தது. மக்களின் கடுமையான எதிர்ப்பைத் தொடர்ந்து கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்கும் தீர்மானத்தை அரசாங்கம் கைவிட்டது. நாட்டின் தேசிய வளங்களைப் பிற நாட்டவர்களுக்கு வழங்கும் கொள்கையில் அரசாங்கம் தற்போதும் உறுதியாக உள்ளது.

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் தோற்றம் பெற்றுள்ளன. அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிய மதத் தலைவர்களும், அரசியல்வாதிகளும் இந்தச் சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றத்தை நாடியுள்ளார்கள். கொழும்பு துறைமுக நகர பொருளாதார சட்டமூலம் தொடர்பில் மகாசங்கத்தினர் முதலில் தெளிவுபெற வேண்டும்.

நாட்டின் பொதுச்சட்டத்துக்கு முரணான விடயங்களை அந்தச் சட்டமூலம் கொண்டுள்ளது என்பது வெளிப்படைத் தன்மையுடன் அறிந்துகொள்ள முடியும். அரசியல்வாதிகள் மகாசங்கத்தினரைச் சந்தித்து இந்தச் சட்டமூலம் தொடர்பில் ஒரு சில விடயங்களை மாத்திரம் குறிப்பிடுகிறார்கள்.

நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளில் மகாசங்கத்தினர்கள் பங்குதாரர்களாகுகின்றமை பௌத்த சாசனத்துக்கு முரணானது அரசியல்வாதிகளின் ஆலோசனைகளை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

அவர்கள் குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்கள். ஆகவே, நாட்டின் எதிர்காலம் தொடர்பில் மகாசங்கத்தினருக்கு பௌத்த சாசனத்தின் ஊடாக அதிக பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, அவற்றைச் செயற்படுத்த மகாசங்கத்தினர் கவனம் செலுத்த வேண்டும்.
– என்றார்.

# இலங்கையில் பரவும் கொரோனா இந்தியாவின் மாறுபாடு அல்லவாம்

இந்தியாவில் பரவும் கொரோனாத் தொற்றின் மாறுபாடு இலங்கையில் பரவுகிறது என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை என முதற்கட்ட ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

நாட்டில் பரவும் வைரஸின் மாற்றம் தொடர்பான முழுமையான விவரம் அடுத்த வாரம் வெளியாகும் என ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலையின் ஒவ்வாமை நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் ஆய்வுகூடத் தலைவரான வைத்தியர் சந்திம ஜீவந்திர தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்குள் வைரஸ் பரவ வாய்ப்புள்ளது. இருப்பினும், இதுபோன்ற சாத்தியத்தைக் குறைக்க சுகாதார அதிகாரிகள் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர்.

நாட்டில் பரவி வரும் வைரஸ் ஒரு பிறழ்வுக்கு உட்பட்டது மற்றும் ஒரு புதிய மாறுபாடாகக் கூட இருக்கலாம் என முதற்கட்ட ஆய்வுகள் காட்டுவதாகவும் வைத்தியர் சந்திம ஜீவந்திர தெரிவித்தார்.

குறிப்பாக பண்டிகை காலத்திற்குப் பின்னர் கொழும்பு, குருநாகல் மற்றும் கண்டியில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளில் இந்த பிறழ்வை அவதானித்ததாகவும் அவர் குறிப்பிட்டார். தற்போது இலங்கையில் பரவி வரும் வைரஸ் வேகமாகப் பரவி வருவதாகவும், அதிக அளவில் பரவக்கூடும் என்பதால் மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் பின்பற்றினால் வைரஸ் மேலும் பரவுவதைத் தடுக்க முடியும் என்றும் வைத்தியர் சந்திம ஜீவந்திர தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவில் இருந்து மகாராஷ்டிரா மீள்கிறது!

## அமைச்சர் அமித் தேஷ்முக் நம்பிக்கை



மகாராஷ்டிராவில் கொரோனா வைரஸ் அசுர வேகத்தில் பரவி வருகிறது. மாநிலத்தில் தினந்தோறும் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் நேற்றைய பாதிப்பு 50 ஆயிரத்திற்கும் கீழ் குறைந்து உள்ளது என மாநில அரசு அறிவித்துள்ளது. அதன்படி மாநிலத்தில் புதிதாக 48 ஆயிரத்து 700 பேர் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாநிலத்தில் 2 லட்சத்து 22 ஆயிரத்து 474 பேருக்கு கொரோனா சோதனை செய்யப்பட்டதாகவும், நேற்று முன்தினம் 2 லட்சத்து 89 ஆயிரத்து 535 பேருக்கும், 24 ஆம் திகதி 2 லட்சத்து 77 ஆயிரத்து 610 பேருக்கும் சோதனை செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, சோதனை எண்ணிக்கை குறைக்கப்பட்டதால் பாதிப்பு எண்ணிக்கையும் குறைவாக வந்திருக்கலாம் எனவும் சில தரப்புகள் கூறுகின்றன.

இதற்கிடையே, மகாராஷ்டிரா மாநிலம் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டு வருவதாக அம்மாநில அமைச்சர் அமித் தேஷ்முக் தெரிவித்துள்ளார். '15 மாவட்டங்களில் புதிதாகத் தொற்றுக்கு ஆளாவோரின் எண்ணிக்கையை விட குணமடைவோர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இது திருப்தி அடையும் வகையில் இருக்கிறது. கொரோனாத் தடுப்பு விதிகளை தீவிரமாகப் பின்பற்றி வந்தால் 2 ஆவது அலை விரைவில் கட்டுக்குள் வரும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பா.ஜ.க. அரசின் தவறான நிர்வாகம்; உத்தரப்பிரதேசம் கடுமையாக பாதிப்பு!

## அகிலேஷ் யாதவ் குற்றச்சாட்டு



உத்தரப்பிரதேச மாநிலத்தில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கையை அந்த மாநில அரசு குறைத்து வெளியிடுகின்றது என அகிலேஷ் யாதவ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சமாஜ்வாதி கட்சியின் அகிலேஷ் யாதவ், நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கையில், பா.ஜ.க. அரசின் தவறான நிர்வாகம் மற்றும் கொரோனா பாதிப்பு நிலைவரம் குறித்த குறுகிய பார்வை காரணமாக உத்தரப்பிரதேசம் 'கொரோனா பிரதேச' மாநிலமாக மாறியுள்ளது.

மாநிலத்தில் உடல்களை எரியூட்டும் இடங்களில் கூட்டம் அலைமோதும் நிலையில், கொரோனா பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை குறைத்துக் காட்டுவதற்காக தவறான புள்ளி விவரங்களை மாநில அரசு வெளியிட்டு வருகிறது. அரசின் இந்தத் தோல்வி குறித்து, பா.ஜ.க. எம்.பி., எம்.எல்.ஏ.க்களே அதிருப்தி தெரிவித்து வருகின்றனர்.

பா.ஜ.க. சார்பில் வெளியிடப்பட்ட மருத்துவர்கள் எண்ணிக்கை, மருத்துவமனைகள் மற்றும் பிற வசதிகள் தொடர்பான புள்ளி விவரங்களும் போலியானவையே. ஆட்சியில் இருப்பது குறித்து பா.ஜ.க. இனிப் பெருமைப் படக்கூடாது. கொரோனாவால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை தங்களுடைய குடும்ப உறுப்பினர்கள் போல எண்ணி, அவர்களின் வீடுகளிலேயே ஒக்சிஜன் கிடைப்பதை பா.ஜ.க. அரசு உறுதிப்படுத்த வேண்டும். கொரோனாத் தடுப்பூசிகளுக்கான கட்டணம் நாடு முழுவதும் ஒரே மாதிரியாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்படும் அமெரிக்க அதிபர்கள் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு



இந்தியாவில் கொரோனாத் தடுப்பூசியின் தேவை அதிகரித்துள்ள நிலையில், அதை தயாரிப்பதற்கு தேவையான மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்ய அமெரிக்கா திடீரென தடை விதித்தது. இதன் காரணமாக, இந்தியாவில் கொவிஷீல்ட் தடுப்பூசியின் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், அமெரிக்காவின் இந்த முடிவுக்கு உலகளவில் ஏற்பட்ட எதிர்ப்பினால் 'இந்தியாவுக்குத் தேவையான தடுப்பூசி மூலப்பொருள்கள், மருத்துவப் பொருள்கள், உபகரணங்கள், வென்டிலேட்டர்கள், ஒக்சிஜன் செறிவூட்டிக் கருவிகள் உட்பட அனைத்து உதவிகளும் உடனடியாக வழங்கப்படும்' என அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் துணை அதிபர் கமலா ஹாரிஸும் நேற்று அறிவித்துள்ளனர். அதிபர் பைடன் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'கொரோனா நோய்த் தொற்றின் ஆரம்பத்தில் அதனைச் சமாளிக்க முடியாமல் அமெரிக்க மருத்துவமனைகள் தவித்தபோது இந்தியா உதவி செய்தது. நாங்கள் அதனை மறக்கவில்லை. அதைப் போலவே, இந்தியாவிற்குத் தேவைப்படும் நேரத்தில் உதவுவதற்கு நாங்கள் உறுதியாக இருக்கிறோம்' என்று தெரிவித்துள்ளார்.

# குஜராத்தில் இருந்து மகாராஷ்டிராவுக்கு 45 தொன் திரவ ஒக்சிஜன் கொண்டுவரப்பட்டது



இந்தியாவிலேயே மகாராஷ்டிராவில்தான் கொரோனாப் பாதிப்பு உச்சத்தில் உள்ளது. இதன் காரணமாக மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான ஒக்சிஜனுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து மகாராஷ்டிராவுக்கு வெளிமாநிலங்களில் இருந்து ரயில்கள் மூலம் ஒக்சிஜன் கொண்டு வரும் பணி நடந்து வருகிறது. இதில் முதல் தொகுதி ஒக்சிஜன் எக்ஸ்பிரஸ், விசாகப்பட்டினத்தில் இருந்து கடந்த 23 ஆம் திகதி 7 தாங்கி திரவ ஒக்சிஜனுடன் மகாராஷ்டிராவுக்கு சென்றது.

இரண்டாவது ஒக்சிஜன் எக்ஸ்பிரஸ் குஜராத்தில் இருந்து நேற்று அங்கு சென்றுள்ளது. குஜராத் மாநிலத்தின் ஜாம்நகரில் உள்ள ஹாப்பாவில் இருந்து மூன்று டாங்கர் லொறிகளில் திரவ ஒக்சிஜனுடன் நேற்று முன்தினம் மாலை புறப்பட்ட எக்ஸ்பிரஸ் ரயில், நேற்றுக் காலை 11.30 அளவில் நவி மும்பையில் உள்ள கலம்பொலியை வந்தடைந்தது. மூன்று தாங்கிகளிலும் மொத்தம் 45 தொன் திரவ ஒக்சிஜன் கொண்டு செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# இந்தியாவில் நிலவும் சூழல் வேதனை அளிக்கிறது உலக சுகாதார அமைப்பின் தலைவர் கவலை




கடந்த சில நாள்களாக ஒருநாள் கொரோனாப் பாதிப்பு 3.5 லட்சத்திற்கும் மேல் பதிவாகி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது. கொரோனாப் பாதிப்பால் மிகக்கடுமையான சுகாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இந்தியாவுக்கு ஆதரவுக் கரம் நீட்ட பல நாடுகளும் முன்வந்துள்ளன.

இந்த நிலையில், இந்தியாவில் நிலவும் கொரோனாப் பாதிப்பு மிகுந்த வேதனை அளிக்கின்றது என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களை இணையம் மூலம் சந்தித்த அவர், "இந்தியாவில் நிலவும் சூழல் மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது.

முக்கிய கருவிகள் வழங்குதல் உட்பட உலக சுகாதார அமைப்பால் செய்ய முடிந்த அனைத்தையும் செய்வோம் என்று கூறியுள்ளார்.

# கொரோனாப் பரவல் தொடர்பாக தேர்தல் கமிஷனுக்கு கண்டனம் சென்னை உயர்நீதிமன்றின் கருத்துக்கு மம்தா பானர்ஜி வரவேற்பு



கொரோனாப் பரவல் தொடர்பாக தேர்தல் கமிஷனுக்கு கண்டனம் தெரிவித்த சென்னை உயர்நீதிமன்றின் கருத்தை திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி வரவேற்றுள்ளார்.

கரூர் தொகுதி வாக்கு எண்ணிக்கைக்கான ஏற்பாடுகள் தொடர்பாக மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் தாக்கல் செய்த பொதுநல வழக்கை சென்னை உயர்நீதிமன்றின் தலைமை நீதிபதி சஞ்சிவ் பானர்ஜி, செந்தில்குமார் ராமமூர்த்தி ஆகியோர் நேற்று விசாரித்தனர்.

அப்போது, கொரோனாப் பரவல் தொடர்பாக தேர்தல் கமிஷனுக்கு நீதிபதிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர். குறிப்பாக, பெருந்தொற்று பரவிய நிலையில் அரசியல் கட்சிகள் பேரணிகள், கூட்டங்கள் நடத்துவதற்கு தேர்தல் கமிஷன் அனுமதித்ததைச் சுட்டிக்காட்டிய நீதிபதிகள், கொரோனா 2 ஆவது அலை பரவலுக்கு தேர்தல் கமிஷனே காரணம் என்றும், மிகவும் பொறுப்பற்ற நிறுவனமாக தேர் தல் கமிஷன் செயல்பட்டுள்ளது எனவும் சாடினர்.

சென்னை உயர்நீதிமன்றின் இந்தக் கருத்தை மேற்கு வங்காள முதலமைச்சரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி வரவேற்றுள்ளார். வடக்கு கொல்கத்தாவில் நேற்று நடந்த கட்சியின் செயல் வீரர்கள் கூட்டத்தில் அவர் பேசும்போது,

'சென்னை உயர்நீதிமன்றின் உத்தரவை நான் வரவேற்கிறேன். தேர்தல் கமிஷன் தனது பொறுப்பில் இருந்து தப்பிக்க முடியாது என்பதை அது மிகவும் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறது. மேற்கு வங்காளத்தில் தேர்தல் நடத்திய முறை குறித்தும், வாக்குப்பதிவு அனைத்தும் முடிந்ததும் தேர்தல் கமிஷனுக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்கு தொடருவோம். மாநிலத்தில் தொற்று அதிகரித்து இருக்கும் நிலையிலும் கடைசி சில கட்டத் தேர்தல்களை இணைத்து நடத்துவதற்கு தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுக்கவில்லை.

மாநிலத்தில் கொரோனாவால் ஏற்பட்டுள்ள தற்போதைய கொடூரமான சூழலுக்குப் பிரதமர் மோடியும், தேர்தல் கமிஷனுமே காரணம். சுடுகாடுகளில் கொத்துக்கொத்தாக பிணங்கள் எரிக்கப்பட்டு வரும் நிலையில், மோடியோ 'மன் கீ பாத்' உரைகளை வழங்குவதில்தான் தீவிரமாக இருக்கிறார்.

அந்தவகையில் மக்களின் பாதுகாப்பு குறித்து உணர்வற்ற நிலையில் அவர் இருக்கிறார்.

கொரோனா பாதித்த மாநிலங்களில் முகாமிட்டுள்ள 2 லட்சம் மத்தியப்படைகளை தயவுசெய்து திரும்பப்பெறுங்கள். பள்ளி-கல்லூரிகள் மற்றும் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள அவர்கள் கொரோனா மேலாண்மை நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருக்கின்றனர். அவர்களில் 75 சதவீதம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டும் இருக்கலாம். தயவு செய்து மேற்கு வங்காளத்தின் கடைசிக் கட்ட தேர்தலின் போது மத்தியப் படைகளை திரும்ப பெறுங்கள்.

நான் பிரசாரம் செய்வதை தடுப்பதற்காகவும், பா.ஜனதா தலைவர்கள் அதிகபட்ச பிரசாரங்களை மேற்கொள்வதற்காகவும் வடக்கு வங்காளத்தில் வெவ்வேறு நாள்களில் வாக்குப்பதிவை வைத்துள்ளனர். இப்படி அருகில் உள்ள பகுதிகளில் வெவ்வேறு முறை நடத்தப்பட்ட தேர்தலால் 9 முறை நான் வடக்கு வங்காளத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆனாலும் எனது காயமடைந்த ஒரு காலையும் கொண்டு 50 நாள்களாக பிரசாரம் மேற்கொண்டேன்!' என்று மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியுடன் ஜோ பைடன் தொலைபேசியில் பேச்சு



இந்தியாவில் கொரோனாவின் 2 ஆவது அலை ஏற்பட்டுள்ளதால் தொற்றுப் பாதிப்பு வேகமாக பரவி வருகிறது. தினசரி பாதிப்பு 3 லட்சத்தை தாண்டி உள்ளது.

இதையடுத்து ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளின் எண்ணிக்கை நிரம்பி வழிகிறது. கொரோனா நெருக்கடியில் சிக்கி உள்ள இந்தியாவுக்கு உதவ தயாராக இருக்கின்றது என பல்வேறு நாடுகள் அறிவித்து உள்ளன.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, ரஷ்யா போன்ற உலக நாடுகள் மருத்துவ உபகரணங்கள் அனுப்பி இருப்பதாக தெரிவித்து உள்ளன.

இந்தநிலையில் நேற்று இரவு பிரதமர் மோடி – அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஆகியோர் தொலைபேசியில் பேசினார்கள். இருவரும் சுமார் 45 நிமிடங்கள் பேசினர். இதில் கொரோனாப் பரவல், அதனை கட்டுப்படுத்துவது குறித்து ஆலோசனை நடத்தினார்கள்.

இதுகுறித்து பிரதமர் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறும்போது, அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் இரு நாடுகளிலும் நிலவும் கொரோனாச் சூழல் குறித்து பேசினேன். மேலும் தடுப்பூசிக்கான மூலப் பொருள்களை தடையின்றி பெறுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இந்தியாவுக்கு அமெரிக்கா செய்ய முன்வந்துள்ள உதவிகளுக்காக நன்றி தெரிவித்துக் கொண்டேன் என்றார்.

மோடியுடன் ஆலோசனை நடத்தியது குறித்து அமெரிக்கா அதிபர் ஜோ பைடன் கூறியதாவது:–

இன்று நான் இந்திய பிரதமர் மோடியுடன் தொலைபேசியில் பேசினேன். கொரோனா சிகிச்சைக்கான மருத்துவஉபகரணங்கள், தடுப்பூசிமூலப்பொருள்கள் ஆகியவற்றை விரைவில் தந்து உதவ உறுதி அளித்துள்ளேன்.

கொரோனாவால் அமெரிக்கா கடுமையாகப் பாதிக்கப்பட்ட போது இந்தியா உதவி செய்தது. இப்போது அவர்களுக்கு நாங்கள் உதவி செய்ய போகிறோம் என்று டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

மேலும் இரு நாடுகள் சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், கொரோனாவுக்கு எதிராக இநதியா நடத்தி வரும் யுத்தத்தில் அமெரிக்கா துணை நிற்கும் என்று அதிபர் ஜோ பைடன் உறுதி அளித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்டவை போர்கால அடிப்படையில் அனுப்பும் பணி அடுத்த சில நாள்களுக்குள் தொடங்கும் என்று அமெரிக்க ராணுவ தலைமையகமான பென் டகன் அறிவித்து உள்ளது.

# கார் விபத்துக்கு ஓட்டோபைலட் சிஸ்டம் காரணம் அல்ல - டெஸ்லா விளக்கம்

டெக்சாசில் நடந்த டெஸ்லா கார் விபத்துக்கு ஆட்டோபைலட் சிஸ்டம் காரணம் அல்ல என டெஸ்லா விளக்கம் அளித்துள்ளது.



கடந்த 17 ஆம் திகதி நடந்த இந்த விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர். சாரதி இல்லாத டெஸ்லா எஸ் மாடல் மின்சார காரில் ஓட்டோபைலட் முறை தோல்வி அடைந்ததே இந்த விபத்துக்கு காரணம் என கூறப்பட்டது.

ஆனால் விபத்து நடந்த நேரத்தில் ஓட்டோபைலட் முறை செயலில் இருக்கவில்லை எனவும், யாரோ ஒரு நபர் அந்த வாகனத்தை இயக்கியதே விபத்துக்கு காரணம் எனவும் தான் நடத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளது என டெஸ்லா தலைவர் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

விபத்துக்குள்ளான காரை ஆய்வு செய்ததில், அதன் ஸ்டியரிங் சக்கரம் சேதமடைந்தது உறுதியானதால், யாரோ அந்த சாரதி இல்லா காரை இயக்கி விபத்தை ஏற்படுத்தி உள்ளனர் எனவும் டெஸ்லா அதிகாரிகள் தெரிவித்தனர்.

# உலகம் முழுவதும் கொரோனாப் பாதிப்பு 14.84 கோடியாக உயர்வு




உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு வருபவர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்போரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்நிலையில் தற்போதைய நிலவரப்படி, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 14,84 கோடியை தாண்டி உள்ளது. இதன்படி உலகம் முழுவதும் தற்போது 14,84,66,117 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 126,109,983 பேர் குணமடைந்துள்ளனர். மேலும் வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 31 லட்சத்து 33 ஆயிரத்து 212 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்கு தற்போது 1,92,22,922 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 1,11,082 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

# இந்திய விமானங்கள் தரையிறங்க மே 15 வரை தடை; ஆஸ்திரேலியா



இந்தியாவில் கொரோனா வைரஸின் 2 ஆம் அலை கட்டுக்கடங்காமல் பரவி வருகிறது. தினசரி நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து 3 லட்சத்தை தாண்டிவிட்டது. உயிரிழப்பும் கணிசமாக உயர்ந்து வருகிறது. இதனால் நோய்த் தொற்று அதிகம் கண்டறியப்படும் மாநிலங்களில் ஊரடங்கு விதிக்கப்பட்டு, கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இங்கிலாந்து, நியூசிலாந்து, ஐக்கிய அரபு அமீரகம், கனடா, ஈரான் உள்ளிட்ட பல நாடுகள் இந்திய விமானங்கள் தங்கள் நாடுகளுக்கு வருவதற்கு தடை விதித்துள்ளன.

அந்த வரிசையில் தற்போது ஆஸ்திரேலியாவும் இந்திய விமானங்களுக்கு தடை விதித்துள்ளது.

இந்திய விமானங்கள் ஆஸ்திரேலியா வர மே 15 வரை தடை விதித்து பிரதமர் ஸ்காட் மாரிசன் அறிவித்துள்ளார்.

# ஜப்பான் இடைத்தேர்தலில் சுகாவின் கட்சி தோல்வி



ஜப்பான் நாடாளுமன்றத்தின் மேலவையில் 2 இடங்களுக்கும், கீழ் அவையில் ஒரு இடத்துக்கும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு நேற்று முன்தினம் முடிவுகள் வெளியாகின.

இதில் 3 இடங்களிலும் பிரதமர் ஹோஷிஹைட் சுகா தலைமையிலான ஆளும் தாராளவாத ஜனநாயகக் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. 3 இடங்களையும் எதிர்க்கட்சிகள் கைப்பற்றின.

இந்த நிலையில் தேர்தல் தோல்வியைப் பணிவுடன் ஏற்று கொள்கிறேன் என பிரதமர் ஹோஷிஹைட் சுகா கூறினார். இதுகுறித்து அவர் கூறுகையில் “மக்களின் தீர்ப்பைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தேர்தல் முடிவுகளை ஆராய்ந்து திருத்த வேண்டிய வியங்களை ஆராய்வேன். அதேசமயம் ஜப்பான் தற்போது கொரோனா வைரஸால் 3 ஆவது அவசரகால நிலையை எதிர்கொண்டு வருவதால் ஜப்பானைப் பாதித்த தொற்றுநோயை எதிர்ப்பதே எனது பதவியில் எனது முக்கிய முன்னுரிமை ஆகும்” என்றார்.

# முகக் கவசம் அணியாததால் தாய்லாந்து பிரதமருக்கு அபராதம்

தாய்லாந்தில் கடந்த சில வாரங்களாக கொரோனா வைரஸ் பரவல் வேகம் எடுக்கத் தொடங்கியுள்ளது.

அங்கு கடந்த 4 நாள்களாக தினசரி கொரோனா பாதிப்பு 2 ஆயிரத்துக்கும் அதிகமாக பதிவாகி வருகிறது.


கொரோனா வைரஸின் புதிய அலையைக் கட்டுப்படுத்த அந்த நாட்டு அரசு கொரோனா கட்டுப்பாடுகளை தீவிரமாக்கி வருகிறது.

அந்த வகையில் நாடு முழுவதும் பொது இடங்களில் மக்கள் முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தலைநகர் பாங்கொக்கில் மக்கள் எல்லா நேரங்களிலும் முகக் கவசம் அணிந்து இருக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

முகக் கவசம் அணியாதவர்களுக்கு 20 ஆயிரம் பாத் (இலங்கை மதிப்பில் சுமார் ஒரு லட்சம்) வரை அபராதம் விதிக்கப்படுகின்றது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தலைநகர் பாங்காக்கில் தடுப்பூசி கொள்முதல் குறித்து நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் பிரதமர் பிரயுத் சான் ஓச்சா முகக் கவசம் அணியாமல் பங்கேற்றது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

பிரதமரின் இந்த செயலுக்குப் பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்ததைத் தொடர்ந்து, பாங்கொக் நிர்வாகம் அவருக்கு 6 ஆயிரம் பாத் (இலங்கை மதிப்பில் சுமார் ரூ.30 ஆயிரம்) அபராதம் விதித்தது.



மேலும் இந்த விவகாரம் தொடர்பாக பிரதமர் பிரயுத் சான் ஓச்சா மீது பொலிஸில் புகார் அளித்துள்ளதாக பாங்காக் ஆளுநர் அஸ்வின் குவான்முவாங் தெரிவித்தார்.

இதனிடையே இந்தியாவில் கொரோனா வைரஸ் 2 ஆவது அலை பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் சூழலில் வருகின்ற 1 ஆம் திகதி முதல் இந்தியப் பயணிகள் தாய்லாந்து வருவதற்கு அந்த நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

அடுத்த அறிவிப்பு வரும் வரை இந்த தடை அமலில் இருக்குமென்றும் அதே சமயம் இந்தியாவிலிருந்து தாய்லாந்து வரும் மக்களுக்கு இதில் விலக்கு அளிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம்கள் கிளர்ந்தெழ வேண்டும் கல்முனை மாநகர மேயர் அழைப்பு

ரிஷாதின் கைது சட்ட ஆட்சியையும் நீதி முறைமையையும் குழிதோண்டிப் புதைக்கும் செயல் எனவே சமூகப் பாது காப்புக்காக முஸ்லிம்கள் கிளர்ந்தெழ வேண்டும் என கல்முனை மேயர் றகீப் அழைப்பு விடுத்துள்ளார் .

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், நடுநிசியில் வீடு புகுந்து கைது செய்யப்பட்டிருப்பதா னது, நாட்டில் சட்டத்தின் ஆட்சி முற்றாக குழிதோண்டிப்புதைக்கப்பட்டிருப்பதையே எடுத்துக்காட்டுகிறது எனக் கூறி அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஒரு சாதாரண பிரஜையை கைது செய்வதாயினும், அந்தக் கைதுக்கான காரணம் அவனுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்பது இலங்கையின் அரசி யலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட ஓர் அடிப்படை உரிமையாகும்.

இந்நிலையில் ரிஷாத் பதியுதீன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் அவருக்கு சிறப்புரிமை உண்டு. மேலும், கைதுக்கு முன்னர் நாடாளுமன்ற சபா நாயகரின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நாடாளுமன்ற உறுப் பினர் என்பதை ஒரு புறம் வைத்தாலும், ஒரு சாதாரண குடிமகனைக் கைது செய் கின்றபோது கடைப்பிடிக்கப்பட வேண்டிய அடிப்படை உரிமை கூட கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது நாட்டின் சட்ட ஆட்சியையும் நீதி முறைமையை யும் குழிதோண்டிப்புதைக்கின்ற கேவல மான செயலாகவே பார்க்கிறோம். இது எமது நாடு சர்வாதிகார ஆட்சியை நோக் கிப் பயணிப்பதையே வெளிப்படுத்துகின் றது.

ஆட்சியாளர்களின் முறையற்ற நிர்வா கத்தினால் டொலரின் பெறுமதி நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. நாட்டின் பொரு ளாதாரம் அதல பாதாளத்திற்கு சென்றுள் ளது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதிலும் மக்களுக்கு நிவா ரணமளிப்பதிலும் அரசாங்கம் தோல்வி யைக் கண்டிருக்கிறது. விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தேர்தல் காலத்தில் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடிய வில்லை. போர்ட் சிற்றி விவகாரம் நாட்டில் பாரிய அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. இவைஎல்லாவற்றையும்விடஈஸ்டர்குண் டுத் தாக்குதல் சூத்திரதாரிகளை வெளிப் படுத்த முடியாமல் அரசாங்கம் திணறிப் போயுள்ளது. அத்தாக்குதலின் பின்னா லுள்ள மர்ம முடிச்சுகளை அவிழ்ப்பதற் கும் அரசாங்கம் தயாரில்லை.

இவை எல்லாவற்றையும் மூடி மறைப்பதற்காகவும் மக்களை திசை திருப்புவதற்காகவுமே சஹ்ரானுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட் டில் நாளாந்தம் முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இந்தப் பின்னணியிலேயே சட்டத்தரணி இஜாஸ் ஹிஸ்புல்லாஹ், ஹஜ்ஜுல் அக்பர், அசாத் சாலி போன்ற முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அந்த வரிசையில் பாராளுமன்ற உறுப் பினர் ரிஷாத் பதியுதீனும் அவரது சகோ தரரும் பயங்கரவாத முத்திரை குத்தப் பட்டு, அடாத்தாக கைது செய்யப்பட்டிருக்கி றார்கள். இது அப்பட்டமான பழிவாங்கல் என்பது புரிகிறது.

இந்த வன்மமான செயற்பாடுகளின் மூலம் பேரினவாத சக்திகளுக்கு தீனி போடுவதற்கும் தனது ஆட்சி நிருவாகத் தின் தோல்வியை மூடி மறைப்பதற்கும் அரசாங்கம் முனைகின்றது. ஜனாஸா



எரிப்பில் தொடங்கி முஸ்லிம் சமூகத்தை அடக்கியொடுக்கும் அத்தனை செயற் பாடுகளையும் அரங்கேற்றி தோல்விய டைந்துள்ள அரசாங்கம், முஸ்லிம் அறி ஞர்களையும் சமூகத் தலைமைகளை யும் வேட்டையாடும் செயற்பாட்டிலும் நிச்சயம் தோல்வியடையும் என்பதில் சந்தேகமில்லை.

முஸ்லிம்களின் பலமான ஆயுதம் துஆ எனும் பிரார்த்தனையேயன்றி சஹ் ரானின் குண்டுகளல்ல என்பதை ஆட்சி யாளர்களும் பேரின சக்திகளும் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் ஒருபோதும் ஆயுத கலாசாரத்தில் நம்பிக்கை வைத்திருக்க வில்லை. சிலரது அரசியல் தேவைக்காக ஏவி விடப்பட்டவனே சஹ்ரான் கும்பல் என்றும் அவனது தாக்குதல் மத, சமூக ரீதியானதல்ல என்றும் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் முன்னதாக சொன் னதே யதார்த்தமாகும். இக்கருத்தியலை யும் புரட்டிப்போட வேண்டிய தேவை ஆட்சியாளர்களுக்கு எழுந்திருப்பதையே ரிஷாத் பதியுதீனின் நடுநிசிக் கைது உணர்த்துகிறது.

இந்த அராஜகத்தை முஸ்லிம் சமூகம் வன்மையாகக் கண்டிப்பதுடன் அவர்கள் அனைவரினதும் விடுதலைக்காக இப் புனித ரமழான் நோன்புடன் பிரார்த்திப் போம். மேலும், முஸ்லிம் சமூகத்திற் கெதிரான இத்தகைய அடக்குமுறைகள் தொடர்வதை இனியும் அனுமதிக்க முடி யாது. சமூகப் பாதுகாப்புக்காக எமது முஸ் லிம் மக்கள் வீதியில் இறங்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. முஸ்லிம்கள் தமது உணர்வலைகளை வெளிப்படுத்த வேண்டும். இந்த அநியாயங்களுக்கு எதிராக முஸ்லிம்கள் சமூக ரீதியாக ஒன் றிணைந்து கிளர்ந்தெழ வேண்டியுள் ளது. இது எமது சமூகக் கடமையாகும்.

இந்த சூழ்நிலையில் ரிஷாத் பதியுதீ னைப் போன்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களையும் கைது செய்து விசாரிக்க வேண்டும் என தன்னை மொட்டு செயற்பாட்டாளர் என்று கூறிக்கொள்ளும் ஓர் ஈனப்பிறவி முக நூலில் தெரிவித்திருப்பதானது அவனது வன்மமான குணத்தையே காட்டுகின் றது. முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்க மாக இருக்கின்ற எவனும் ரிஷாத் பதியு தீன் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் மகிழ்ச்சியடைய மாட்டான்.

அவ்வாறே, இன்று முஸ்லிம் சமூகத் திற்காக எவ்வித அப்பழுக்குமின்றி நாடா ளுமன்றத்திலும் சர்வதேச மட்டத்திலும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்ற ஒரே யொரு அங்கீகாரம் பெற்ற தலைமை யாக இருக்கின்ற ரவூப் ஹக்கீம் அவர்க ளும் கைது செய்யப்பட்டு, அந்த ஏக குர லும் நசுக்கப்பட்ட வேண்டும் என்று அந் தப்பிறவி கோமெழுப்புகிறது என்றால் அதன் பின்னணி என்னவாக இருக்கும் என்பதை எல்லோராலும் புரிந்து கொள்ள முடியும் - என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் குறிப்பிட்டுள்ளார்.

## இடிந்து விழும் நிலையில் கிண்ணியா பாடசாலை



திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா வல யக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட முன்னணிப் பாடசா லைகளில் ஒன்றான கிண்ணியா முஸ்லிம் மகளிர் தேசியப் பாடசாலையின் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று சுவர்கள் இடிந்த நிலையிலும், வெடித்து கம்பிகள் வெளி யில் தென்படுகின்ற நிலையில் காணப்படுகின்றது.

இக்கட்டடத்தில் சுமார் 8 வகுப்புக்கள் நடைபெற்று வரும் நிலையில் மாணவர்களும் ஆசிரியர்களும் மிகவும் அச்சத்துடன் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். பாடசாலையின் எஸ். டி.இ. சி. உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தி னரின் தீர்மானத்தின் படி இவ்வகுப்பறை கட்டடத்திற் குள் வகுப்பு நடாத்துவது தற்காலிகமாக இடை நிறுத் தப்பட்டுள்ளது.

## தந்தை செல்வா நினைவு தினத்தையொட்டி களுவாஞ்சிகுடியில் இரத்ததான நிகழ்வு

தந்தை செல்வாவின் 44ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு களுவாஞ்சிகுடியில் மாபெரும் இரத்ததான நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஸ்தாபக தலைவர் அமரர் தந்தை செல்வாவின் 44ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழரசுக்கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான நிகழ்வு களுவாஞ்சிகுடியில் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நாடாளு மன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் அலுவலகத் தில் மாவட்ட வாலிபர் முன்னணியின் தலைவர் லோ. தீவாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரின் வளாகத் தில் பழமரக்கன்றுகள் தந்தை செல்வாவின் நினைவாக நடப்பட்டன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைகளின் இரத்த வங்கிப்பிரிவினர் குறித்த நிகழ்வுக்கு வருகைதந்து இரத்த தானத்தை பெற்றுக்கொண்டார்கள்.

இந்த இரத்தான நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர்களான பொன்.செல்வராசா, கி.துரைராஜசிங்கம்,



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதியின் தலைவரு மான பா.அரியநேத்திரன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பு வைத் திய அதிகாரி க.ஹரிசானன், இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் மட்டக்களப்பு மாவட்ட வாலிபர் முன்னணி யின் செயலாளர், பொருளாளர்கள், தாதி உத்தியோகஸ் தர்கள், இலங்கை தமிழரசுக்கட்சியின் அங்கத்தவர்கள், வாலிபர்கள், மகளிர்கள் எனப்பலர் கலந்துகொண்டார்கள்.



## மாகாண சபைத் தேர்தல் மூலமாக இறைமை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

முன்னாள் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரட்ணசிங்கம்

மாகாண சபைத் தேர்தல் மூல மாக இறைமை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் திரு கோணமலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் கே.துரை ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

தம்பலகாமம் பொற்கேணி பகுதியில் நேற்று இடம் பெற்ற தந்தை செல்வாவின் 44 ஆவது நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண சபை முறை பல வருடங்களாகத் திருத்தங்களுடன் செம்மையாக இருந்து வந்த போதும் அதை நீக்க வேண்டும் 13 ஆவது திருத்தத்தை இல்லா மல் செய்ய வேண்டும் என்பது ஜனநாயக நாட்டுக்கு அவ்வளவு ஆரோக்கியமல்ல, அரசியல் சட் டத்தின் பிரகாரம் சில தேர்தல் முறையில் திருத்தங்களை கொண்டு வந்தாலும் அதனை விரும்புகிறோம் இந்த நாட்டில் வாழும் அத்தனை மக்களுக்கும் அந்தந்த மாகாணத்தின் பிரதி நிதிகளைக் கொண்டு சுபீட்சமாக வும், சுதந்திரமாகவும் வாழ்வதற் கான அதிகாரப் பகிர்வுகளை இறைமைகளை மாகாண சபை மூலமாக கொண்டு வரவேண் டும் தேர்தலை பிற்போடாமல் தற்போதைய நிலைமை சீராகி யதும் உடனடியாக நடாத்த வேண்டும் மாகாண பொறுப்பை மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கவும் வேண்டும் என்பதும் அதன் கட் டுப்பாட்டுக்குள்ளும் இருப்பதும் பரவாயில்லை .

மாகாண முதலமைச்சர்களை அழைத்து கூட்டங்களை நடாத் தியபோதும் மாகாண சபை தேர் தல் முக்கியம் என்பதை வலியுறுத்தி னார்கள் அது போன்று நாங்க ளும் இதனை முக்கியமாக கருதி தேர்தலை பிற்போடாது நடாத்த வேண்டும் என அரசாங்கத்தி டம் வலியுறுத்துகிறோம் என்றார். இதில் 1,000 இளைஞர் யுவதி களுக்கு வீட்டுத் தோட்ட மரக்கன்று கள் வழங்கும் திட்டத்துக்கு ஏற்ப மரக்கன்றுகளும் வழங்கி வைக் கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பஞ்சாப் கிங்ஸைத் தோற்கடித்தது கொல்கத்தா நைட்ரைடர்ஸ்!



ஐ.பி.எல். 2021 தொடரின் 21 ஆவது லீக் போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 5 விக்கெட்டுக்களால் பஞ்சாப் கிங்ஸ் அணியைத் தோற்கடித்தது.

அஹமதாபாத் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பஞ்சாப் கிங்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து, 123 ஓட்டங்களைப் பெற்றது. மயங் அகர்வால் 31 ஓட்டங்களையும் கிறிஸ் ஜோர்டன் 30 ஓட்டங்களையும் எடுத்தனர். கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பிரசீத் கிருஷ்ணா 3 விக்கெட்டுக்களையும் பட் கம்மின்ஸ் மற்றும் சுனில் நரைன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

124 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, 16.4 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அணித் தலைவர் ஒய்ன் மோர்கன் ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களையும் ராகுல் திரிபாத்தி 41 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஒய்ன் மோர்கன் தெரிவானார்.

## ஒக்சிஜன் வாங்குவதற்கு உதவியாக வேகப்பந்து வீச்சாளர் பட் கம்மின்ஸ் நன்கொடை

இந்தியாவில் கொரோனா இரண்டாவது அலை வேகமாகப் பரவி வருவதால் பாதிப்புக்கு ஆளாகுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைக்குத் தேவையான ஒக்சிஜன் கிடைப்பதில் சிரமமும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்காக விளையாடிவரும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் பட் கம்மின்ஸ், கொரோனாவால் பாதித்தவர்களுக்கு மருத்துவமனைகளில் ஒக்சிஜன் வாங்கி சிகிச்சை அளிப்பதற்கு வசதியாக பிரதமர் நிவாரண நிதிக்கு 50 ஆயிரம் டொலர்களை (37 லட்சம்) நன்கொடையாக வழுங்குவதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பதிவில், 'இந்தியாவுடனான எனது உறவு கடந்த சில ஆண்டுகளாக நெருக்கமடைந்து வருகிறது. இங்குள்ள மக்கள் அன்புடன் பழகக் கூடியவர்கள். தற்போதைய நிலையில் இந்தியாவில் பெரும்பாலானோர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு வருவதை அறிந்து கடும் துயரத்திற்கு நான் ஆளாகியுள்ளேன்.

மக்கள் தீவிரமாக கொரோனாவால் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் ஐ.பி.எல். தொடர் நடத்துவது தேவை தானா? என்ற விவாதம் எல்லாம் நடந்து வருகிறது. இந்த இக்கட்டான நேரத்தில் ஐ.பி.எல். தொடர் மக்களின் வேதனையை ஒரு நாளில் சில மணி நேரமாவது போக்கும் என நம்புகிறேன். இந்தியாவில் இருக்கும் சூழ்நிலையை மனதில் கொண்டு என்னால் முடிந்த பங்களிப்பை பிரதமர் நிவாரண நிதிக்கு அளித்துள்ளேன். என்னுடன் ஐ.பி.எல். தொடரில் விளையாடும் சக வீரர்கள் மற்றும் இந்தியாவின் நிலைமையை அறிந்த உலக மக்களும் தங்களால் முடிந்த உதவியைச் செய்யலாம்' – என்று குறிப்பிட்டுள்ளார்.






துருக்கியில் நடைபெற்ற இஸ்தான்புல் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டித் தொடரில் ருமேனியாவின் சொரானா சிர்ஸ்டி கிண்ணத்தை வென்றிருக்கிறார்.

துருக்கியில் 2021ஆம் ஆண்டுக்கான இஸ்தான்புல் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டித் தொடர் நடைபெற்றது. இதன் இறுதிச்சுற்றில் ருமேனியாவைச் சேர்ந்த உலகின் 67 ஆம் நிலை வீராங்கனையான சிர்ஸ்டி 6 - 1, 7 - 6 (7/3) என்ற செட்களில், உலகின் 17ஆம் நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் எலிஸ் மொடன்ஸை வென்றார்.

இறுதிச்சுற்று உட்பட இப்போட்டியில் எந்தவொரு சுற்றிலுமே சிர்ஸ்டி ஒரு செட்டைக் கூட இழக்காமல் வென்றுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. இத்துடன் மொடன்ஸை 3 முறை சந்தித்துள்ள சிர்ஸ்டி, அனைத்திலுமே வெற்றியைப் பதிவு செய்துள்ளார். சிர்ஸ்டி தனது முதல் சம்பியன் பட்டத்தை 2008 ஆம் ஆண்டு தாஷ்கன்ட் போட்டியில் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொமன்வெல்த் பெண்கள் ரி20 தொடர் பங்கேற்கும் அணிகளின் விவரம்

22 ஆவது கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி இங்கிலாந்தில் உள்ள பெர்மிங்காமில் அடுத்த ஆண்டு (2022) ஜூலை - ஒகஸ்ட் மாதங்களில் நடக்கவிருக்கிறது. இதில் பெண்களுக்கான இருபதுக்கு இருபது கிரிக்கெட் தொடர் முதல்முறையாக இணைக்கப்பட்டுள்ளது.

8 அணிகள் பங்கேற்கும் இந்த போட்டித் தொடருக்கு போட்டிகளை நடத்தும் நாடு என்ற முறையில் இங்கிலாந்தும், கடந்த ஏப்ரல் முதலாம் திகதியில் சர்வதேச கிரிக்கெட் சபையினால் (ஐ.சி.சி.) வெளியிடப்பட்ட தரவரிசைப்படியலிருந்து ஆஸ்திரேலியா, இந்தியா, நியூஸிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளும் நேரடியாகத் தகுதி பெற்றுள்ளன.

மேற்கிந்தியத் தீவுகள் பிராந்தியத்திலிருந்து ஒரு நாடு தகுதி பெறும். எஞ்சிய ஓர் அணி, தகுதிச் சுற்றுப் போட்டிகள் மூலம் தெரிவு செய்யப்படும். தகுதிச் சுற்றுப் போட்டிகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாத இறுதிக்குள் நடைபெறும் என்றும் அது குறித்த விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

## பார்சிலோனா ஓபின் டென்னிஸ் தொடர் 12 ஆவது முறையாக சம்பியனானார் நடால்!



பார்சிலோனா ஓபின் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் முன்னணி வீரரான ரபேல் நடால் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ரபேல் நடால் கிரேக்கத்தின் சிட்சிபாஸை எதிர்கொண்டார். பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இந்தப் போட்டியில், முதல் செட்டை 6 - 4 என்ற கணக்கில் நடால் கைப்பற்றினார். இரண்டாவது செட்டில், நடாலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஸிட்சிபாஸ் அபாரமாக விளையாடினார். டை பிரேக் வரை நீண்ட இரண்டாவது செட்டை கடும் போராட்டத்திற்கு மத்தியில் 7 - 6 என்ற கணக்கில் ஸிட்சிபாஸ் வென்றார்.

இருவரும் தலா ஒரு செட்டைக் கைப்பற்றியதனால் வெற்றியைத் தீர்மானிப்பதாக மூன்றாவது செட் அமைந்தது. இதில் இருவரும் ஆக்ரோஷமாக விளையாடினாலும் இறுதியில் நடால், 7 - 5 என்ற கணக்கில் செட்டைக் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார்.

பார்சிலோனா பகிரங்க டென்னிஸ் தொடரில் நடால் பெறும் 12 ஆவது சம்பியன் பட்டம் இதுவாகும். முன்னதாக 2005 முதல் 2013 வரையான ஆண்டுகளில் 2010 தவிரவும், 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளிலும் அவர் சம்பியன் பட்டங்களை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனாப் பாதிப்பு தொடர்ந்து அதிகரிப்பதனால் உலகக் கிண்ண துப்பாக்கி சுடுதல் போட்டிகள் ரத்து!

கொரோனாப் பாதிப்பு உலகளவில் அதிகரித்து வருவதனால், அஸர்பைஜானில் நடைபெறவிருந்த உலகக் கிண்ண துப்பாக்கி சுடுதல் போட்டிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவின் புதுடெல்லி நகரில் கடந்த மார்ச் மாதத்தில் உலகக் கிண்ண துப்பாக்கி சுடுதல் போட்டிகள் நடைபெற்றன. மொத்தம் 10 நாள்கள் நடந்த இந்தப் போட்டிகளில் 53 நாடுகளைச் சேர்ந்த 294 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். 22 நாடுகளின் வீரர்கள் பதக்கங்களை வென்றனர்.

இந்நிலையில், அஸர்பைஜான் நாட்டின் பகு நகரில் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டித் தொடரின் அடுத்த சுற்று நடைபெறவிருந்தது. ஆனால், அந்நாட்டில் அதிகரித்து வரும் கொரோனா பாதிப்புகளால் போட்டியை ரத்து செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.



இதுபற்றி சர்வதேச துப்பாக்கி சுடுதல் போட்டிக்கான கூட்டமைப்பு வெளியிட்டுள்ள செய்தியில், 'அஸர்பைஜானில் கொரோனா தொற்று எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனைக் கவனத்தில் கொண்டு அஸர்பைஜான் குடியரசின் அமைச்சர்கள், இவ்வாறான கால கட்டத்தில் போட்டியை நடத்துவது முறையாக இருக்காது என்றும் அது பாதுகாப்பற்றது என்றும் முடிவெடுத்துள்ளனர். எனவே, வருகிற ஜூன் 21 முதல் ஜூலை 2 வரை நடைபெற திட்டமிடப்பட்டிருந்த போட்டிகள் ரத்துச் செய்யப்படுகின்றன' - என தெரிவித்துள்ளது.

## ஐ.பி.எல். 2021 இன்றைய போட்டி

ஐ.பி.எல். 2021 தொடரின் இன்றைய லீக் போட்டியில் புள்ளிப் பட்டியலில் இரண்டாம் மூன்றாமிடங்களிலுள்ள டெல்லி கப்பிட்டல்ஸ், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதவுள்ளன. அஹமதாபாத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டி இரவு 7.30க்கு ஆரம்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் மட்டுமே நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்



## இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தினால் மாத்திரம் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். தேசியப் பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்ட காரணத்தால் தான் 30 வருடகாலசிவில் யுத்தமும், ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலும் நாட்டில் இடம் பெற்றன.

முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் தேசியப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது.

தேசியப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்குவது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாகும் என நீர்ப்பாசனம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் தேசிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

நாடு அனைத்து துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டுமாயின் தேசியப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்பை மையப்படுத்தி அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படும் என்பதை பல காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளங்கிக் கொள்ள முடியும்.

தேசியப் பாதுகாப்பு பலவீனப்படுத்தப் பட்டதால் 1983 ஆம் ஆண்டுதமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு தோற்றம் பெற்றது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத காரணத்தால் சிவில் யுத்தம் 30 வருட காலம் வரை நீடித்தது.

இதனால் இரு தரப்பிலும் பாரிய விளைவுகள் தோற்றம் பெற்றன. 2005 ஆம் ஆண்டுக்கு பிறகு பாரிய போராட்டத்திற்கு மத்தியில் 30 வருட கால யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கம் தேசியப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்கவில்லை. பல்வேறு காரணிகளால் தேசியப் பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது.

இதன் காரணமாகவே ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இத்தாக்குதலுக்குப் பொறுப்புகூற வேண்டிய நல்லாட்சி அரசாங்கத்தின் உறுப்பினர்கள் இன்று தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராகக் கருத்துரைக்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் குண்டுத்தாக்குதல்கள் இல்லாதொழிக்கப்பட்டன.

ஆகவே, ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் அரசாங்கத்தை விமர்சிப்பது ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் தற்போதும் விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குண்டுத்தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார், பொலிஸார் பொறுப்புக்களை மீறியுள்ளார்களா என்பது தொடர்பில் துறைசார் மட்டத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. - என்றார்.

## உருளைக் கிழங்குக்கு சுங்க வரி அதிகரிப்பு



இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு மீதான விசேட பொருள்களுக்கான சுங்க வரி 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் உருளைக் கிழங்கு அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இம்முறை அமோக அறுவடை எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மீதான விசேட பொருள்களுக்கான சுங்க வரி நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், ஒரு கிலோகிராமுக்கு 50 ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## தூதுவராகவும், அமைச்சுச் செயலாளராகவும் முன்னாள் படை அதிகாரிகள் இருவர் நியமனம்!

இரண்டு முன்னாள் இராணுவ அதிகாரிகள் இலங்கையில் தூதுவராகவும், அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, இத்தாலிக்கான இலங்கையின் புதிய தூதுவராக ஏயர் மார்ஷல் சுமங்கல டயஸ் நியமிக்கப்பட்டுள்ளார், அத்துடன், மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸ் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க தசநாயக்க கருத்து வெளியிடுகையில் -

'ஐந்து அரசு அமைச்சுகளின் செயலாளர்களை நியமிக்க உயர்பதவிகளுக்கான நாடாளுமன்றக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது .சபாநாயகர் மஹிந்த யப்பா அபேவர்தன தலைமையிலான குழு இந்த அனுமதியை வழங்கியுள்ளது.



இதன்படி, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளராக அனுர திசாநாயக்கவும், நகர்ப்புற மேம்பாடு மற்றும் வீட்டுவசதி அமைச்சின் செயலாளராக ஸ்ரீநிமல் பெரேராவும், பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக மேஜர் ஜெனரல் ஜகத் அல்விஸையும் நியமித்ததற்கு உயர் குழு ஒப்புதல் அளித்தது.

அத்துடன், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளராக பத்ராணி ஜயவர்தனவும், காணி மற்றும் நில மேம்பாட்டு அமைச்சகத்தின் செயலாளராக ஆர்.ஏ.கே.ரணவக்கவையும் நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இத்தாலிக்கான இலங்கையின் புதிய தூதுவராக ஏயர் மார்ஷல் சுமங்கல டயஸை நியமிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்று தம்மிக்க தசநாயக்க தெரிவித்துள்ளார்.

## சுகாதார விதிகளை மீறிய மேலும் 108 பேர் கைது

முகக் கவசம் அணியத் தவறியமை மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுகளுக்காக கடந்த 24 மணிநேரத்தில் 108 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் 3 ஆயிரத்து 755 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் மேல் மாகாணத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், சுகாதார வழிகாட்டல்களை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் செயற்பாடு தொடரும் என்றும் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

## கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில் நிரம்பி வழியும் இளைஞர், யுவதிகள்

கொழும்பு ஐனுர் வைத்தியசாலை மற்றும் ஹோமாகம வைத்தியசாலையில் கொவிட் தொற்றாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட அனைத்து அறைகளும் நிரம்பியுள்ளன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.டி.எச். வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவின் அனைத்துக் கட்டில்களும் நேற்று நிரம்பியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஹோமகம வைத்தியசாலையில் கொவிட் தொற்றாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட அனைத்து அறைகளும் நிரம்பியுள்ளன. மேலும் சில வைத்தியசாலைகளை கொவிட்த் தொற்றாளர்களுக்கு ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என வைத்தியசாலையின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இம்முறை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களில் அதிகமானோர் இளைஞர், யுவதிகள் எனவும் அவர்களுக்கு அதிக தீவிரமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை பாரிய அளவு அதிகரித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். இது மிகவும் ஆபத்தான நிலைமை எனவும், மக்கள் இதனைப் புரிந்துகொண்டு பயணக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சளி, காய்ச்சல் அறிகுறி காணப்பட்டால் உடன் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்

### சிறுவர்கள் தொடர்பில் கவனம் என்கிறார் வைத்தியர் விஜேசூரிய



காய்ச்சல், இருமல், சளி போன்ற நோய் அறிகுறிகள் காணப்பட்டால் பிள்ளைகளை வீட்டில் வைத்திருக்காமல் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தாமதமின்றி பிள்ளைகளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் இயக்குநரும் வைத்தியருமான விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் நிலைமைக்கமைய சிறுவர் வைத்தியசாலைகளின் தயார் நிலை தொடர்பில் வைத்தியசாலையின் இயக்குநரிடம் வினவிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர் வைத்தியசாலைகளில் இதுவரையில் எவ்வித கொவிட் தொற்றுக்குள்ளான சிறுவர்களும் சிகிச்சை பெறவில்லை. வைத்தியசாலைகள் தயார் நிலையில் உள்ளன.

காய்ச்சல், இருமல், சளி போன்ற நோய் அறிகுறிகள் காணப்பட்டால் பிள்ளைகளை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லத் தயங்க வேண்டாம். கடந்த காலங்களில் தாமதமாகக் கொண்டுவரப்பட்டமையால் சிறுவர்கள் பாதிக்கப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதனால் இது தொடர்பில் பெற்றோர் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## சீனாவிடமிருந்து முதலீடுகளை இலங்கை எதிர்பார்க்கின்றதாம்

### வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

பிராந்தியத்தில் கொவிட் தொற்றுக்கள் அதிகரித்ததை அடுத்து, சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி தனது இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடன் தொற்றுநோய் தொடர்பான ஒத்துழைப்பு, வறுமை ஒழிப்பு மற்றும் பிற ஆதரவு தொடர்பாக இன்று உரையாடலை ஆரம்பிக்கவுள்ளார்.

இது தொடர்பிலான மெய்நிகர் கூட்டம் நடைபெறும். இதன்போது இலங்கை அரசாங்கம் தனது நிலைப்பாட்டை முன்வைக்கும் என்று வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.



கொவிட் பரவல் தீவிரமாகியுள்ள நிலையில் மனித உயிர்கள் மற்றும் பொருளாதாரத்தில் அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் சீனாவிடமிருந்து மேலும் முதலீடுகளை இலங்கை எதிர்ப்பார்க்கின்றது என அமைச்சர் கூறியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org